(சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 43/2008) மற்றும் 2008 ஆம் ஆண்டு தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2008) ஆகிய இரு சட்டமுன்வடிவுகள் ஆய்வு குழுவிற்கு அனுப்பப்படுகின்றன. ஆய்வுக் குழு (Select Committee) உறுப்பினர்கள் பின்னர் அறிவிக்கப்படுவார்கள். உயர் கல்வித் துறை அமைச்சர் ஆய்வுக் குழுவின் தலைவராக இருந்து பணியாற்றுவார்.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2008) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(அ.ஆ) தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2008) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2008)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

@ 14-5-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2008 மே 14

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 1-45

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கல்வியியல் பல்கலைக்கழகம் என்பது பல்கலைக்கழகமாக உருவாக்கப்பட்டாலும்கூட இந்தப் பல்கலைக்கழகத்தின்கீழே தனியார் சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் ஏராளமாக வர இருக்கின்றன. இப்பொழுதே பார்த்தோம் என்று சொன்னால், தனியார் சுய நிதி கல்வியியல் கல்லூரிகள், பி.எட். கல்லூரிகளில் அரசு நிர்ணயித்த கட்டணத்திற்கு மேலே அவர்கள் ஏராளமான தொகை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். பி.எட். படிப்பிற்கு ரூபாய் 1 இலட்சம், 1½ இலட்சம், 2 இலட்சம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதேநேரத்திலே இட ஒதுக்கீட்டு முறையையும் அவர்கள் பின்பற்றுவதில்லை. ஒற்றைச் சாளர முறையில் தேர்வு செய்யப்படக்கூடிய மாணவ, மாணவியர்களுக்கும் அவர்கள் விருப்பத்திற்கேற்ப கட்டணம் வசூத்துக்கொள்கிறார்கள். இட ஒதுக்கீட்டைப் பின்பற்றுவதில்லை. ஆகவே, இந்தப் பல்கலைக்கழகத்தை உருவாக்குகிற வேளையில் கட்டணத்தை--அரசு நிர்ணயிக்கிற கட்டணமே அங்கே வசூலிக்கப்படவேண்டும். இட ஒதுக்கீட்டு முறை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும். அப்படி இருக்குமானால் இந்தப் பல்கலைக்கழகம் உருவாவதனாலே நாட்டு மக்களுக்குப் பலன் இருக்கிறது. அதற்கு வேட்டு வைக்கும் என்று சொன்னால், இந்தப் பல்கலைக்கழகம் உருவாவதிலே அவசியம் இல்லாமல் போய்விடும் என்பதை உணர்ந்து அதற்கும் இந்தப் பல்கலைக்கழகம் வழிவகுக்குமா என்பதை அரசு ஆய்விலே எடுத்துக்கொண்டு, அதை ஆய்வு செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்தக் கல்வியியல் கல்லூரிகளில் எல்லாம், அவ்வப்பொழுது அவரவர்கள் தொடங்கி, அவரவர்கள் தேர்வு நடத்திக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை இருந்தது. அவற்றை எல்லாம் ஒரே நிலைமையிலே கொண்டு வரவேண்டும் என்றுதான் இந்தப் பல்கலைக்கழகம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலிருந்து குறிப்பிட்ட காலத்தில் அவை துவங்கப்பட்டு, குறிப்பிட்ட காலத்தில் தேர்வுகள் நடத்தப்பட்டு அந்த seniority--ஏனென்றால் முதலில் அந்த

2008 மே 14] [டாக்டர் க. பொன்முடி]

seniority basis-ல்தான் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கிறோம். அந்த அடிப்படையிலே இருக்கிற காரணத்தினால்தான் இந்தப் பல்கலைக்கழகம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தப் பல்கலைக்கழகத்திலே நீங்கள் சொன்ன அனைத்தையும் கொண்டு வருவதற்கு—இட ஒதுக்கீடு உள்ளிட்ட மற்ற அனைத்துமே அவற்றில் பின்பற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 59 வரை மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 59 வரை மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆஇ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2008), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 6-5-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.